2026 ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 142/2025

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 (LW7) – சிங்கம் |
| தகப்பனார் பெயர்: | ரஃபேல் |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் |
| வயது : | 61 |

29.07.2026

(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி காணொளி மூலம் மதுரை, மாவட்ட நீதிமன்ற வளாகத்திலிருந்து சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் மதுரை மாநகர காவல்துறையில் வெடிகுண்டு கண்டுபிடித்து செயலிழக்க செய்யும் பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் பணிபுரிந்த காலத்தில் போடி தாலுகா காவல்நிலையத்திலிருந்து குற்ற எண்.269/2023 வழக்கில் கைப்பற்றப்பட்ட நாட்டு வெடிகுண்டை செயலிழக்க செய்யுமாறு போடி, குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் கடிதத்தின்படி மதுரை மாநகர ஆணையர் அவர்களின் உத்தரவின்படி நானும், என்னுடன் பணிபுரிந்த தலைமை காவலர் 7407

திரு.ராதாகிருஷ்ணன் அவர்களும் 19.02.2024ம் தேதியன்று போடி தாலுகா காவல்நிலையம் சென்று அறிக்கை செய்தோம்.

2. வழக்கின் கைப்பற்றப்பட்ட நாட்டு வெடிக்குண்டை பார்வையிட்டு, புகைப்படம் எடுத்துக்கொண்டு, பாதுகாப்பான இடமான பரமேஸ்வரன் கோவிலுக்கு பின்புறமாக மலையடிவாரம் சென்று, அங்கு வைத்து ஒவ்வொன்றாக பிரித்து, அதனை தணிக்கை செய்து, செயலிழக்க செய்தும், அதன்பிறகு அதனை வெடிக்க செய்து, அதன் பின்பு வெடிமருந்துகளை அழித்து, அந்த இடத்தை புகைப்படம் எடுத்தும், மேல்நடவடிக்கைக்கு அனுப்ப காவல்துறை ஆய்வாளர் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணிகள் சுமார் 11 மணி முதல் 12.30 மணி வரை செய்து முடித்தோம்.

3. மேற்படி 11 நாட்டு வெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்தபிறகு, அதன் அறிக்கையை ஆய்வாளர் அவர்களிடம் நீதிமன்றத்திற்கு அனுப்ப புகைப்படத்துடன் கூடிய அறிக்கையை ஒப்படைத்தோம். மேற்படி 11 நாட்டு வெடிகுண்டுகள் குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, நாட்டு வெடிகுண்டுகள் வெடித்தால் மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்று காவல் ஆய்வாளர் அவர்களிடம் கூறினோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

4. நாங்கள் கொடுத்த அறிக்கை மற்றும் புகைப்படங்கள் (எண்ணம் 5) **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. I.E.D. Container –1 (மூக்குப்பொடி டப்பா) **சா.பொ.1** ஆகவும், I.E.D வெடிகுண்டில் சுற்றப்பட்ட வெள்ளை நிற நூல் **சா.பொ.2** ஆகவும், Life explosive sample (Fire Cracker material) சுமார் 5 கிராம் **சா.பொ.3** ஆகவும், வெள்ளைநிற கூழாங்கற்கள் **சா.பொ.4** ஆகவும், வெடிக்க செய்வதற்கு முன்பு எடுத்த மண் மாதிரி I.E.D. சுமார் 10 கிராம் **சா.பொ.5** ஆகவும், வெடிகுண்டை வெடிக்க வைத்த பின்பு எடுக்கப்பட்ட மாதிரி மண் I.E.D., 10 கிராம் **சா.பொ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் வழங்கியும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.29 17:01:43 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.07.2026